**கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை**
**வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்**
**தாதியியல் - விஞ்ஞான கௌரவ/சிறப்புமாணி வெளிவாரிப் பட்டக் கற்கைநெறி**
**கல்வியாண்டு – 2021/ 2022**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படும் தாதியியல் - விஞ்ஞான கௌரவ/சிறப்புமாணி வெளிவாரிப்பட்ட கற்கைநெறிக்கு பதிவு செய்வதற்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

1. பொதுத் தாதியத்தில் டிப்ளோமா பெற்ற தாதியாக இருத்தல்
2. இலங்கை தாதிய சங்கம் (Sri Lanka Nursing Council) அல்லது இலங்கை மருத்துவ சங்கத்தில் (Sri Lanka Medical Council) பதிவு செய்திருத்தல்.
3. தாதியியல் சேவையில் ஆகக் குறைந்தது இரு வருட கால அனுபவம்

**அத்துடன்**

4. க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி

**அல்லது**

5. கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் அல்லது பின்அடிப்படை தாதியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட பின் அடிப்படைத் தாதியியல் டிப்ளோமா (Post Basic Diploma in Nursing) பாடநெறியில் (18 மாதங்கள்) சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

6. கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட தகைமையினை கொண்டிருத்தல்

**தெரிவு செய்யும் முறை**

1. தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் பொதுத்தாதியம் சம்பந்தமான ஒரு எழுத்துப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.
2. மேற்படி பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்

பாடநெறியின் காலம் : 2 வருடங்கள்

பாடநெறி மொழிமூலம் : ஆங்கிலம்

இது வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் ஒரு பயிற்சி நெறியாகும்.

**கட்டணங்கள்**

1. பாடநெறிக்கான கட்டணங்கள் : ரூபா 215,000/= - இரண்டு தவணைகளில் செலுத்த முடியும் (முதலாம் வருடம் ரூபா 125,000.00, இரண்டாம் வருடம் ரூபா 90,000.00/=, கட்டணங்கள் மீள செலுத்தப்படமாட்டாது)
2. அனுமதிக்கட்டணம் : ரூபா 1,000/=

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் http://www.cedec.esn.ac.lk/bsc-nur என்ற வலைத்தளத்திலுள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும், நிதியாளருக்கு விலாசமிடப்பட்டு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூபா 1000/= பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பல்கலைக்கழக பிரதியையும் scan செய்து மேற்கூறிய வலைத்தளத்தில் தரவேற்றம் செய்ய வேண்டும்.

பணம் வைப்பிலிடவேண்டிய கணக்கிலக்கம்
227-1-001-9-0000-390, மக்கள் வங்கி, செங்கலடி கிளை.

அத்துடன் விண்ணப்பதாரிகள் அச்சடிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை நிரப்பி இதனுடன் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் நிழல் பிரதியுடன், பணம் வைப்பிலிட்ட பற்றுச் சீட்டின் பல்கலைக்கழக பிரதியினையும் இணைத்து சுயவிலாசம் இடப்பட்ட ரூபா 45/= பெறுமதி உள்ள முத்திரை ஒட்டப்பட்டதுமான $9^{1/2}$ '' X $4^{1/2}$ '' அளவுள்ள கடித உறை ஒன்றையும் **உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி** எனும் விலாசத்திற்கு 03.09.2021 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தாதியியல் - விஞ்ஞான கௌரவ/சிறப்புமாணி வெளிவாரிப்பட்ட கற்கைநெறி 2021/2022"** என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி

உதவிப்பதிவாளர்
வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை,
செங்கலடி.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 03.09.2021**

மேலதிக தகவலுக்கு

தொலைபேசி இல : 0652240972
மின் அஞ்சல் : cedecinfo@esn.ac.lk
Web : http://www.cedec.esn.ac.lk

குறிப்பு: நாட்டின் பெருந்தொற்று காரணமாக மேற்படி பட்டப்படிப்புகள் தொடர்பாக மாற்றங்கள் ஏற்படின் அவை மேற்குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழக இணையத் தளத்தில் குறிப்பிடப்படும்.

**பதிவாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை**
**வந்தாறுமூலை,**
**செங்கலடி**
**08.08.2021**